A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 90 / 2022**

திரு A. தங்கராஜ்,
காவடிதட்டுவிளை வீடு,
பனங்கரை, அருமனை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு C. செல்வராஜ்)

எதிர்

செயற்பொறியாளர்/ இ&ப/ குழித்துறை,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மருதன்கோடு, மீனச்செல்,
குழித்துறை – 629 153.

...... எதிர்மனுதாரர்
(திரு T.R. பெரியய்யா, செயற்பொறியாளர்/ இ&ப/ குழித்துறை)

**மனு பெறப்பட்ட நாள்: 13-10-2022**

**கேட்புரை நாள்: 12-01-2023**

**ஆணை நாள்: 25-01-2023**

13.10.2022 அன்று பெறப்பட்ட திரு A. தங்கராஜ், காவடிதட்டுவிளை வீடு, பனங்கரை, அருமனை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 90/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.01.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்

ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு எண் 183–009–298–ஐ மறு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **<u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர் தனது வீட்டிற்கு தரை தளத்தில் ஒரு மின் இணைப்பும் முதல் தளத்தில் மற்றொரு மின் இணைப்பு கொண்டுள்ளார்.

2.2 உதவி மின்பொறியாளர்/அருமனை குழுவினர் மின் இணைப்புகளை ஆய்வு செய்தபோது தவறுதலாக தரை தளத்திற்கும் முதல் தளத்திற்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டது கண்டறியப்பட்டு ஒரே வளாகத்தில் இரு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதால் ஒரு மின் இணைப்புடன் மற்றொரு மின் இணைப்பு இணைத்து கோருமாறும் தவறும் பட்சத்தில் மின் இணைப்பு துண்டிக்கபடும் என மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதம் மூலம் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 மேல்முறையீட்டாளரிடமிருந்து பதில் வராத காரணத்தால் முதல் தளத்தில் வழங்கப்பட்ட மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.4 எனவே, துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மறு மின் இணைப்பு வழங்கக் கோரி மேல்முறையீட்டாளரின் மகன் திரு T.ராஜேஷ், கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 19.04.2022 அன்று அணுகியுள்ளார்.

2.5 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், 02.08.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>**

கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 02.08.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*
*TNERC Distribution Code 27.13 ல் "within a door no. or sub door no. an establishment or person will not be given more than one service connection என உள்ளது. TNERC Distribution Code 27.14 ல் "where more than one person or more than one establishment in occupation of a door no or sub door no. more than one service connection will be given only if there is a permanent physical / electrical segregation of areas for which different service connection are applied for" இரு தரப்பு வாதங்களையும் விசாரணை செய்ததின் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் மனுதாரருக்கு 12.12.2004 ல் 183-009-166 என்ற மின் இணைப்பு தரை தளத்திற்கும் 12.2.2021 ல் 183-009-298 என்ற மின்னிணைப்பு முதல் தளத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. 183/009/298 என்ற மின்னிணைப்பு வழங்கப்பட்ட போது physical and electrical segregation இருந்ததா என்பதை இரு தரப்பிலும் வாதிக்கவில்லை. கள ஆய்வின் போது physical and electrical segregation இல்லாதது உறுதி செய்யப்பட்டது. உதவி கணக்கு அலுவலர் வருவாய் பிரிவு குழித்துறை அவர்கள் குழுவினர் 24.1.2022 மற்றும் 28.1.2022 ஆகிய தேதிகளில் அருமனை பிரிவுக்குட்பட்ட 28 மின்னிணைப்புகளை ஆய்வு செய்து அதில் 7 மின்னிணைப்புகளில் விதிமுறை மீறல் இருப்பதை கண்டறிந்துள்ளார் என்பதும் தவறுதலாக மின்னிணைப்பு வழங்கிய அலுவலர் மீது நடவடிக்கையும் வாரிய விதிகளுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள மின்னிணைப்புகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கு. ஆ. எண் செ.பொ./வி/உகஅ/வபி/குழி/ கமே.3/அ6/2022 நாள் 2.2.22 மூலம் உதவிச் செயற்பொறியாளர், விநியோகம் குழித்துறை அவர்களுக்கு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது அதன் நகல் உதவிப் பொறியாளர் விநியோகம், அருமனை அவர்களுக்கும் அனுப்பப்பட்டது ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது.*

*அதன் அடிப்படையில் உதவிப் பொறியாளர், விநியோகம், அருமனை அவர்கள் மின் நுகர்வோருக்கு 18.2.2022 அன்று கடித எண்.உ.பொ./வி/அரு/கோ.கட்டு/ அ.எண்.64/22 நாள் 18.2.2022 என்ற கடிதம் எழுதியுள்ளதும் அதில் மனுதாரருக்கு இரண்டு மின்னிணைப்புகள் ஒரே வளாகத்தில் இருப்பதாகவும், தேவையற்ற மின்னிணைப்பை மற்ற மின்னிணைப்புடன் இணைத்து ஒரு மின்னிணைப்பாக மாற்ற கேட்டுக் கொள்ளப்பட்டதும், தவறும் பட்சத்தில் வாரிய விதிகளின்படி, மனுதாரரின் ஒரு மின்னிணைப்பு நிரந்தர மின் துண்டிப்பு செய்து அதற்குரிய மின் பளு,*

மனுதாரரின் வேறு மின்னிணைப்பில் இணைக்கப்படும் என்ற விபரமும் மனுதாரர் ஆகிய திரு. A. தங்கராஜ் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது. சம்பந்தப்பட்ட மின் நுகர்வோர் A. தங்கராஜ் இது நாள் வரையிலும் எந்த வித பதில் கடிதமும் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவில்லை என ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது. 18.2.22 உதவிப் பொறியாளர் வி/ அருமனை அவர்களால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு நுகர்வோர் பதில் தராத காரணத்தால் கடிதத்தில் குறிப்பிட்டபடி 14.3.2022 அன்று 183-009-298 என்ற மின்னினைப்பு நிரந்தர மின் துண்டிப்பு செய்யப்பட்டு அதிலிருந்த மின் பளு, 183-009-166 என்ற மின்னிணைப்பில் 19.4.2022 அன்று சேர்க்கப்பட்டது என ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது.

இவ்வாறு மின் துண்டிப்பு செய்தபின் திரு T. ராஜேஷ் த.பெ. A. தங்கராஜ் என்பவர் கொடுத்த பதில் மனு 25.3.2022 அன்று அலுவலகத்தில் பெறப்பட்டு அதற்கு 19.5.2022 அன்று உதவிப் பொறியாளர்/வி/அருமனை அவர்களால் கடித எண் உ.பொ/வி/அரு/கோ,/புகார்/அ.எண்.211/22 நாள் 19.5.2022 மூலம் பதில் வழங்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது. பதில் வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

Webentry தவறுதலாக போட்டதால் 05/2022 மாத கணக்கீட்டிற்கு குறித்த காலத்தில் பணம் செலுத்த முடியவில்லை என மனுதாரர் மன்றத்தில் தெரிவித்த குற்றச்சாட்டை உற்று நோக்கும் பொழுது வருவாய் மேற்பார்வையாளர் 19.4.2022 அன்று check reading பதிவு செய்த போது 5810 என்பதற்கு பதிலாக 5310 என தவறுதலாக பதிவு செய்து உள்ளதும் தவறாக பதிவு செய்யப்பட்ட மின் அளவை அனுமதி பெற்று திருத்தம் செய்ய கால அவகாசம் தேவைப்பட்டதும் ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது.

கள ஆய்வின் போது Distribution Code 27- 13, 14 க்கு உட்பட்டு physical and electrical segregation இல்லாத காரணத்தினாலும் இரண்டு மின் இணைப்புகளையும் ஒரே குடும்பத்தினர் பயன்படுத்தி வந்ததாலும் வாரிய விதி முறைகளுக்கு மாறாக அவ்விடத்தில் உபயோகத்தில் இருந்த 183-009-298 என்ற மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டது என்றும் இதனால் ஒவ்வொரு கணக்கீட்டின் போதும் வாரியத்திற்கு ஏற்பட்ட 100 யூனிட்டுக்கான வருவாய் இழப்பீடு தவிர்க்கப்பட்டது என்ற மின் பகிர்மான உரிமையாளரின் வாதத்தை ஏற்றுக்கொள்வது என இம்மன்றம் தீர்மானிக்கிறது. மேலும் நுகர்வோரின் மனுக்களுக்கு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நடவடிக்கை எடுக்க இம்மன்றம் மின் பகிர்மான உரிமையாளருக்கு உத்தரவிடுகிறது. மேலும் check reading பதிவு செய்யும் போது இது போன்ற தவறுகள் வருங்காலங்களில் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க இம்மன்றம் உத்தரவிடுகிறது."

4.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.01.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு C. செல்வராஜ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு T.R. பெரியய்யா, செயற்பொறியாளர்/ இ&ப/ குழித்துறை, கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 தனது 23.03.2022 நாளிட்ட மனுவிற்கு உதவி பொறியாளர் எழுத்து பூர்வ பதில் தரவில்லை என்றும் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் சட்டத்திற்கு புறம்பாகவும் முறைகேடாகவும் அகற்றப்பட்ட மின் இணைப்பை உடனடியாக வழங்க வேண்டுமெனவும் மின் இணைப்பை அகற்றி பயனீட்டாளர்களுக்கு ஏற்படுத்திய இடையூறுகளுக்கும் மன உளைச்சலுக்கும், உதவிப் பொறியாளர் மற்றும் கணக்கீட்டாளர் திரு. சுரேஷ் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 30.6.2022 அன்று மன்றத்தில் நடந்த விசாரணையின் போது Distribution Code 27, 13, 14 ன் படி Physical and electrical segregation உள்ள வீட்டிற்கு தனித்தனி மின்

இணைப்பு வழங்கலாம் என்று உள்ளதாகவும் தரைதளம் மற்றும் மேல் தளத்திற்கு தனித்தனி Property Tax உள்ளது என்றும் தனது மின் இணைப்பை மின் துண்டிப்பு செய்யும் போது எந்த நோட்டீசும் கொடுக்காமல், அடாவடியாக வந்து மின் அளவி கழற்றப்பட்டதாகவும் தன்னுடைய மின்னிணைப்பை மின் துண்டிப்பு செய்ய வாரிய விதிகளின் படி வழிவகை இல்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தனது மனுவிற்கு உதவிப் பொறியாளர், அருமனையிடமிருந்து எழுத்து பூர்வமான பதில் 10 நாட்களுக்குள் வராததால் விதிகளின்படி compensation தர வேண்டும் எனவும், வாரிய விதிகளுக்கு எதிராக உதவிப்பொறியாளர் செயல்பட்டுள்ளதால் மின்சார சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் web entry தவறுதலாக பதிவு செய்ததால் 5/2022 ம் மாதத்தில் மின் கட்டணம் கட்ட முடியாத சூழ்நிலையை உதவிப் பொறியாளர் ஏற்படுத்தியதாகவும் பின் காலம் கடந்து BPSC உடன் வசூல் செய்துள்ளார் எனவும், அந்தப் பிரிவில் உள்ள திரு.சுரேஷ் கணக்கீட்டாளரும் அருமனை பிரிவு உதவிப் பொறியாளரும் இந்த கணக்கீடு சம்பந்தமாக முறையாகவும், ஒழுங்காகவும் செயல்படவில்லை என தெரிய வருவதாகவும் இதே வகையான ஒழுங்கீனத்தை தான் மின்னிணைப்பை துண்டிப்பதிலும் உதவிப்பொறியாளரர் கடைபிடித்துள்ளார் என்றும் அநீதிக்கு நியாயம் வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.4 மேலும் உதவிப் பொறியாளர் அருமனையும் பயனீட்டாளர் குறைதீர் மன்ற தலைவரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் பயனீட்டாளரின் குறையை உதாசீனப்படுத்தி ஆணவத்துடனும் நடந்து உள்ளதாகவும், திரு சுரேஷ்குமார் கணக்கீட்டாளரின் முறைகேடான செயல்களுக்கும் அச்சுறுத்தலுக்கும் இணங்கவில்லை என்பதற்காக முறையாக கட்டணம் செலுத்தி பயன்பாட்டில் இருக்கும் மின்னிணைப்பை எந்தவித முன்னறிவிப்பும் இன்றி வீட்டில் எவரும் இல்லாத நேரத்தில் மின்னளவியை கழற்றியது தெரிய வந்துள்ளதாகவும், விதிகளுக்கும் நேர்மைக்கும் புறம்பாக இந்த செயல் மீது கன்னியாகுமரி மேற்பார்வை பொறியாளர் மௌனம் சாதித்து இந்தச் செயலுக்கு துணை போவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 ஒரு வேளை பயனீட்டாளர் குறைதீர் மன்றம் செயல்படாத நிலை இருந்தால் இவர் ஒரு மேற்பார்வை பொறியாளராக செயல்பட்டு நடைபெற்ற செயலுக்கு தீர்வு காண முயற்சித்து இருக்கலாம் மன்றம் செயல்படவில்லை என்பதற்காக மேற்பார்வை

பொறியாளரும் செயலற்றவராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை எனவும், எனவே நேர்மையற்ற செயலற்ற விதிகளுக்கும் புறம்பாகவும் முறைகேடாகவும் செயல்பட்டு வரும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் பயனீட்டாளர் குறைதீர் மன்றத்தில் வைத்த கோரிக்கையின் மீது உரிய தீர்வு வழங்கி நேர்மையுடனும் ஐயத்தையும் நிலைநிறுத்துமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.6 மேலும், மேல்முறையீட்டாளர் 50 நாட்கள் கடந்து பின்பு தான் மின்நுகர்வோர் குறைதீர்வு மையத்தால் நடைபெற்ற கேட்புரைக்கு பின்பு 02.08.2022 அன்று தான் தீர்வு ஆணை கிடைக்கப்பட்டது என்றும் மேலும் 25.03.2022 அன்று முறையிட்ட கடிதத்திற்கு 19.05.2022 அன்று தான் காலம் கடந்து தான் பதில் கிடைக்கப்பெற்றதாகவும் வாதிட்டார்.

5.7 மேலும், அந்த மீட்டரில் 14.03.2022 துண்டிக்கப்பட்ட 183-009-298 மின் இணைப்பின் மின்பளு 19.04.2022 அன்று தான் பயன்பாட்டில் உள்ள மின் இணைப்பு 183-009-166-இல் இணைக்கப்பட்டது. ஆதலால் ஏற்கனவே பயன்படுத்தி வந்த மின் இணைப்பில் மின்சாரம் பயன்பாடு இன்றி அவதிப்பட்டதாகவும் முறையிட்டார். 100 யூனிட்டான இலவச மின்சாரத்திற்கான நுகர்வு விலை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் ஈடு செய்யவில்லையென்றும் அதற்கான தொகையை தமிழ்நாடு அரசாங்கம் ஈடுகட்டுவதாகவும் வாதிட்டார்.

5.8 மேலும், தனிதனியாக மின் இணைப்பை கவனத்தில் கொள்ளாமல் துண்டிக்கப்பட்ட 183-009-298 மின் இணைப்பிலிருந்து மின்பளுவை மீண்டும் திருப்பி முதற்தள பயன்பாட்டில் வழங்குமாறும் மேலும் இச்செயலால் ஏற்பட்ட மனஉளைச்சல், துன்புறுத்தல் போன்ற செயலுக்கு உரிய இழப்பீட்டை வழங்கி நியாயம் வழங்குமாறு முறையிட்டார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், குழித்துறை கோட்டம் குழித்துறை உ.ப. கோட்டம், உதவி மின் பொறியாளர் அருமனை பிரிவுக்குட்பட்ட மின்னிணைப்புகளை உதவி கணக்கு அலுவலர் வருவாய் பிரிவு குழித்துறை அவர்களின் குழுவினர் 24.1.22 மற்றும் 28.1.22 ஆகிய தேதிகளில் ஆய்வு செய்த போது அதில் 7 மின்னிணைப்புகளில் விதிமுறை மீறல் இருப்பது கண்டறிந்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 அதன்படி 12.12.2004 ல் 183–009–166 என்ற மின்னிணைப்பு தரை தளத்திற்கும் 12.2.2021 ல் 183–009–298 என்ற மின்னிணைப்பு முதல் தளத்திற்கும் தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளதாகவும், 183–009–298 என்ற மின்னிணைப்பு வழங்கப்பட்ட போது Physical and electrical segregation இருந்ததா இல்லையா என்பது தெரியவில்லை ஆனால் கள ஆய்வின் போது physical and electrical segregation இல்லாதது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், வீட்டின் உள்ளிருந்து முதல் தளத்திற்கு செல்ல மாடிப்படி அமைத்திருந்தது தெரிய வந்ததுடன் ஒரே குடும்பமே தரைதளம் மற்றும் முதல் தளத்தையும் பயன்படுத்தி வந்தது உறுதி செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 TNERC Distribution Code 27.13 ல் "within a door no. or sub door no. an establishment or person will not be given more than one service connection என உள்ளது. TNERC Distribution Code 27.14 ல் "where more than one person or more than one establishment in occupation of a door no or sub door no. more than one service connection will be given only if there is a permanent physical / electrical segregation of areas for which different service connection are applied for" என உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன்படி வாரிய விதிகளுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள மின்னிணைப்புகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கு.ஆ.எண்.செ.பொ/வி/உகஅ/வபி/குழி /கமே.3/ அ.6/2022 நாள் 2.2.22 மூலம் உதவிச்செயற்பொறியாளர், விநியோகம், குழித்துறை அவர்களுக்கு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளதாகவும், அதன் நகல் உதவி பொறியாளர், விநியோகம் அருமனை அவர்களுக்கும் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 அதன் அடிப்படையில் உதவி பொறியாளர், விநியோகம், அருமனை அவர்கள் மின் நுகர்வோருக்கு உ.பொ/வி/அரு/கோ.கட்டு/அ.எண்.64/22 நாள் 18.2.2022 அன்று கடிதம் எழுதியுள்ளார். அதில் மனுதாரருக்கு இரண்டு மின்னிணைப்புகள் ஒரே வளாகத்தில் இருப்பதாகவும், தேவையற்ற மின்னிணைப்பை மற்ற மின்னிணைப்புடன் இணைத்து ஒரு மின்னிணைப்பாக மாற்ற கேட்டுக்கொள்ளப்பட்டது என்றும் தவறும் பட்சத்தில் வாரிய விதிகளின்படி, மனுதாரரின் ஒரு மின்னிணைப்பு நிரந்தர மின் துண்டிப்பு செய்து அதற்குரிய மின் பளு, மனுதாரரின் மற்ற மின்னிணைப்பில் இணைக்கப்படும் என்ற விபரம் மனுதாரரின் தந்தை ஆகிய திரு.A. தங்கராஜ்

என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும் ஆனால் சம்மந்தப்பட்ட மின் நுகர்வோர் திரு. A. தங்கராஜ் எந்த வித பதில் கடிதமும் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிய வருவதாகவும், 18.2.22 அன்று உதவிப் பொறியாளர் /வி/அருமனை அவர்களால் அனுப்பபட்ட கடிதத்திற்கு நுகர்வோர் பதில் தராத காரணத்தால் கடிதத்தில் குறிப்பிட்டபடி 14.3.2022 அன்று 183-009-298 என்ற மின்னிணைப்பு நிரந்தர மின் துண்டிப்பு செய்யப்பட்டு அதிலிருந்த மின் பளு, 183-009-166 என்ற மின்னிணைப்பில் 19.4.2022 அன்று சேர்க்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இவ்வாறு மின் துண்டிப்பு செய்தபின் திரு.T. ராஜேஷ் த/பெ.A. தங்கராஜ் என்பவர் கொடுத்த பதில் மனு 25.3.2022 அன்று அலுவலகத்தில் பெறப்பட்டு அதற்கு 19.5.22 அன்று உதவிப்பொறியாளர் / வி/அருமனை அவர்களால் பதில் வழங்கப்பட்டுள்ளதாகவும், பின்னர் வருவாய் மேற்பார்வையாளர் 19.4.2022 அன்று check-reading பதிவு செய்த போது 5810 என்பதற்கு பதிலாக 5310 என தவறுதலாக பதிவு செய்துள்ளதும், தவறாக பதிவு செய்யப்பட்ட மின் அளவை, அனுமதி பெற்று திருத்தம் செய்ய கால அவகாசம் தேவைப்பட்டதால் மனுதாரர் 5/2022 மாத கணக்கீட்டுக்கு குறித்த காலத்தில் பணம் செலுத்த முடியவில்லை என தெரிவித்துள்ளதாகவும், ஆனால் மின் நுகர்வோருக்கு மின் கட்டண கடைசி தேதிக்கு முன்னரே தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் மின் நுகர்வோர் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி அபராத கட்டணத்துடன் 27.6.22 அன்று online ல் செலுத்தியுள்ளார் எனவும், மேலும் check reading பதிவு செய்யும் போது இது போன்ற தவறுகள் வருங்காலங்களில் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க பிரிவு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 கள ஆய்வின் போது Distribution Code 27- 13, 14 க்கு உட்பட்டு physical and electrical segregation இல்லாத காரணத்தினாலும் இரண்டு மின்னிணைப்புகளையும் ஒரே குடும்பத்தினர் பயன்படுத்தி வந்ததாலும் வாரிய விதி முறைகளுக்கு மாறாக அவ்விடத்தில் உபயோகத்தில் இருந்த 183-009-298 என்ற மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டது என்றும், இதனால் ஒவ்வொரு கணக்கீட்டின் போது வாரியத்திற்கு ஏற்பட்ட 100 யூனிட்டுக்கான வருவாய் இழப்பீடு தவிர்க்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேலும் மின் நுகர்வோர் வீட்டின் முதல் தளத்திற்கு வீட்டிற்குள் இருந்து உட்புறமாக மாடிப்படி அமைத்திருந்ததை தனித்தனி மின்னிணைப்பு பெற்றதை உறுதி செய்யும் எண்ணத்துடன் தற்சமயம் உள்புறமாக அமைந்திருந்த மாடிப்படி பாதையை தற்காலிகமாக அடைத்துள்ளார் என்பதும் தற்சமயம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான ஆவணங்களாக புகைப்பட நகல் இணைத்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேலும் மின் நுகர்வோர் திரு.தங்கராஜ் நமது வாரியத்தில் முகவராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளதாகவும், அவருக்கு ஒரு வீட்டிற்கு ஒரு மின்னிணைப்பு என்ற விவரம் தெரிந்து தான் தனது மகன் திரு ராஜேஷ் மூலமாக மேல்முறையீட்டு மனு செய்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டு மனுவில் திரு.தங்கராஜ், மேல்முறையீட்டாளர் தன்னுடைய தரைதளம் மற்றும் முதல் மாடியில் உள்ள இரு மின்னிணைப்பு எண் 183–009–166 மற்றும் 183–009–298–இல், ஒன்றான முதற்தளத்தில் பயன்பாட்டில் உள்ள மின்னிணைப்பு எண் 183–009–298 மின் துண்டிப்பு செய்யப்பட்ட பின்பு அதில் உள்ள மின்பளு 183–009–166ல் இணைக்கப்பட்டதை எதிர்த்து மீண்டும் பழைய நிலைப்படியே 183–009–298 மின்னிணைப்பை முதற்தளத்திற்கு வழங்குமாறு கோரும் கோரிக்கையை வாத பிரதிவாதங்களின் கருத்துகளின் அடிப்படையில் கீழே விவரிக்கப்படுகின்றது. மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்புகள் பற்றிய தகவல்கள் உதவி கணக்கு அலுவலர் வருவாய் பிரிவு / குழித்துறை அவர்களது குழுவினர் அருமனை பிரிவில் நடந்த ஆய்வுகளில் 7 மின்னிணைப்புகளில் விதிமீறல் இருப்பதாகவும் அதில் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்புகளும் உள்ளதாக எதிர் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டிற்கு தரைதளத்தில் 183–009–166 என்ற மின்னிணைப்பு 12.12.2004–லிலும் முதல் தளத்திற்கு 183–009–298, 12.02.2021–லிலும் தனிதனியே மின்னிணைப்பு உள்ளதாகவும் தரைதளம் மற்றும்

முதற்தளத்திற்கு தனிதனியே சொத்து வரி உள்ளது என்றும் மின்துண்டிப்பு செய்யும் போது எந்த முன் அறிவிப்பு கொடுக்காமல் செய்யப்பட்டதாகவும் முறையிட்டார். மேலும் 2021ஆம் ஆண்டு முதற்தளத்திற்கு எந்த வாரிய விதிகளின் அடிப்படையில் மின்னிணைப்பு வழங்கப்பட்டது என்றும் ஆகவே 02.08.2022 தேதியிட்ட மன்ற உத்தரவை நிராகரித்து தன்னுடைய முதற்தளத்திற்கு மீண்டும் மின்னிணைப்பு எண் 183-009-298 வழங்குமாறு வலியுறுத்தினார்.

7.4 மேல்முறையீட்டாளர் தன்னுடைய முதற்தளத்திற்கு ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பை மீண்டும் இணைப்பு வழங்க கோருவதால் அக்கோரிக்கை சம்பந்தமாக மின்பகிர்மான விதிகளில் கூறப்பட்டுள்ள வரையறைகள் ஆராய விரும்புகின்றேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"27.Requisitions for Supply of Energy:*

*(14) Where more than one person or more than one establishment is or intended to be in occupation of a door number or sub door number, more than one service connection will be given only if there is a permanent physical/ electrical segregation of areas for which different service connections are applied for.*

*In case of flat system and shopping complexes where more than one flat or shops are located with permanent physical segregation, more than one service shall be given.*

*(15A) Notwithstanding anything contained in sub-regulations (14) and (15), a person or an establishment or an entity shall be given only one service connection in a premises or in contiguous premises to run a business or service or occupation or another form of activity including its associated activities and for activities of the associates even if there is a permanent physical segregation."*

7.5 மேற்கண்ட விதி 27(14)-ன் படி ஒரு கதவிலக்கத்தின் அல்லது துணைக்கதவிலகத்தில், ஒன்றுக்கும் மேற்பட் நபரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனமோ குடியிருக்கும் பொழுது அல்லது குடியிருக்க முற்பட்டாலோ பல மின்னிணைப்புகளுக்கு விண்ணப்பித்த நேர்வுகளில் அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் தனித்தனி மின்பிரிவுகள் இருப்பின், ஒன்றுக்கு மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்றும்,

விதி 27(15)ன்படி அடுக்குமாடி வீடுகளையும் வணிக வளாகங்களையும் பொருத்தவரையில், ஒன்றுக்கும் மேற்பட்ட அடுக்ககங்களோ கடைகளோ வெளிப்படையாக நிரந்தரமாகப் பிரித்துவைக்கப்பட்டிருந்தால் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்றும்,

மற்றும் விதி 27(15A)ன்படி (14) மற்றும் (15)ஆம் ஒழுங்குமுறைவிதிகளில் எப்படி இருந்தபோதிலும், ஒரு நபர் அல்லது நிறுவனம் அல்லது தனித்தன்மையான நிறுவனம் ஆகியவற்றிற்கு ஒரு வளாகத்தில் அல்லது சேர்ந்திருக்கும் வளாகங்களில், அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்பட்ட இடங்களாக இருந்தாலும், ஒரு தொழிலுக்கோ அல்லது சேவைக்கோ அல்லது பணிக்கோ அல்லது அதன் ஐக்கிய பணி நடவடிக்கைகள் உள்ள வேறுவிதமான அமைப்பில் இருக்கும் நடவடிக்கைகளுக்கோ, மற்றும் சார்ந்தவர்களின் பணிகளுக்கோ ஒரே ஒரு மின்னிணைப்பு மட்டுமே தரப்படும் என்று அறியமுடிகிறது.

7.6 மேற்கூறிய விதிகளின்படி ஒன்றுக்கு மேற்பட்ட மின்னிணைப்பு ஒரு கதவிலக்கத்தில் ஒருவருக்கு வழங்க வேண்டும் என்றால் நிரந்தரமாக தனிமைப்படுத்தப்பட்ட இடங்களாக இருக்க வேண்டும் என தெரிய வருகின்றது. இவ்வழக்கில் இரண்டு மின்னிணைப்புகள் ஒரே வளாகத்தில் இருந்ததால், விதிகளின்படி ஒரு மின்னிணைப்பை மற்ற மின்னிணைப்புடன் இணைத்து ஒரே மின்னிணைப்பாக மாற்ற உதவி பொறியாளர், விநியோகம், அருமனை அவர்கள் 18.2.2022 அன்று அறிவிக்கை அளித்துள்ளார். தவறும் பட்சத்தில் வாரிய விதிகளின்படி, நுகர்வோரின் ஒரு மின்னிணைப்பு நிரந்தர மின் துண்டிப்பு செய்து அதற்குரிய மின் பளு, மற்ற மின்னிணைப்பில் இணைக்கப்படும் என்றும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுது மேல்முறையீட்டாளர் துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பை மறு இணைப்பு கோருகிறார்.

7.7 எதிர்மனுதாரர் கள ஆய்வின் போது இரண்டு மின்னிணைப்புகளையும் ஒரே குடும்பத்தினர் பயன்படுத்தி வந்ததால் விதி முறைகளுக்கு மாறாக அவ்விடத்தில் உபயோகத்தில் இருந்த 183–009–298 என்ற மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டது என்றும், இதனால் ஒவ்வொரு கணக்கீட்டின் போது வாரியத்திற்கு ஏற்பட்ட 100 யூனிட்டுக்கான வருவாய் இழப்பீடு தவிர்க்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளர் 100 யூனிட்டான இலவச மின்சாரத்திற்கான நுகர்வு விலை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் ஈடு செய்யவில்லையென்றும் அதற்கான தொகையை தமிழ்நாடு அரசாங்கம் ஈடுகட்டுவதாகவும் வாதிட்டார். இது சம்பந்தமான அறிவுறுத்தல் என்னவென்றால், இலவச மின்சாரத்திற்கான அரசாங்கத்தின் மானியம் விதிமுறைகளின்படி ஈடுசெய்யப்பட வேண்டியது ஒன்றாகும்.

ஆனால், விதிமுறைகளுக்கு மாறாக பெறப்படும் மானியம் அரசுக்கு கூடுதல் செலவீனங்களை தருவதோடு, மின்கட்டண வீதப்பட்டியலின்படி மின்நுகர்வு படிமுறை (slab) களின்படி விதிமுறைகளுக்கு மாறாக பெறப்படும் கூடுதல் மின்னிணைப்புகளால் மின்பகிர்மான கழகத்திற்கும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

7.8 மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் Tariff Order No. 7 of 2022 in T.P. No. 1 of 2022 dtd. 09.09.2022 effective from 10.09.2022 தற்சமயம் வழங்கிய ஆணையில் மேற்கூறிய விதிகளின் அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்பது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதில் கூறப்பட்டவை கீழே விவரிக்கப்படுகிறது.

*“6.2.2 Low Tension Tariff I-A : (Domestic, Multi-tenements, Old age homes, Handlooms)*

6.2.2.1 இந்தக் கட்டணமானது பின்வருவனவற்றிற்குப் பொருந்தும்:

குடியிருப்பு நோக்கங்க*ளுக்கான என்பது* விளக்குகள், மின்விசிறிகள், ஏர் கண்டிஷனர்கள், டிவி மற்றும் பிற அனைத்து வீட்டு உபயோகப் பொருட்க*ளாகும்.* "குடியிருப்பு அலகு" என்பது குடியிருப்பு நோக்கத்திற்காக தனித்தனியான வசதிகள், சமைத்தல் மற்றும் கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். நிரந்தர மற்றும் மின்சாரப் பிரிப்புடன் *இருந்த* ஒரு *தனிதளத்திற்கும்* /குடியிருப்பு *அலகுக்கும்* ஒரே ஒரு சேவை இணைப்பு மட்டுமே அனுமதிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட சேவைகள் ஏற்கனவே இருந்தால், இந்த கட்டணத்தின் வகைப்பாட்டின் கீழ் ஒரு சேவை மட்டுமே தக்கவைக்கப்படும். *மற்ற மின் இணைப்புகள் அணைத்தும் கட்டண* சேவைக*யாக Tariff 1D ஆக மாற்றப்பட்டு* அதற்கேற்ப கட்டணம் வசூலிக்கப்படும். *மேலும்* TNE விநியோகக் குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிரந்தர மற்றும் மின்சாரப் பிரிப்புடன் *இருந்த* ஒரு *தனிதளத்திற்கும்* /குடியிருப்பு *அலகுக்கும்* மிகவும் நன்றாக ஆய்வு செய்யப்பட்டு, *அதனை உறுதி செய்யலாம்"*

என விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

7.9 இவ்வழக்கைப் பொறுத்தவரை எதிர்மனுதாரரின் கள ஆய்வின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் கட்டிடம் நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடமாக இல்லாததாகவும், ஒரே குடும்பம் தரைதளம் மற்றும் முதற்தளத்தையும் பயன்படுத்துவதாகவும் உறுதி செய்ததன் அடிப்படையிலும் மேலும் சான்றாக புகைப்பட நகல் மூலம் தரைதளத்திலிருந்து முதற்தளத்திற்கு உட்புறமாக செல்லும் படிகட்டு உள்ளது என்றும் அது தற்பொழுது தற்காலிமாக மூடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

7.10 மேலும், அப்புகைப்பட நகல்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் வீடானது உள்பக்கம் படிகட்டு அமைப்பு கொண்ட இரட்டையடுக்கம் (Duplex Model) அமைப்பாக தெரிய வருகின்றது. மேலும், எதிர்மனுதாரர் உட்புறமாக அமைக்கப்பட்ட முதற்தள படிகட்டு முறையை நிரந்தரமாக நீக்கினால் தான் தரைதளத்திற்கும் முதற்தளத்திற்கும் நிரந்தர பிரிவு ஏற்படும் என்ற வாதத்தின் அடிப்படையில் தரைதளத்திற்கும் முதற்தளத்திற்கும் நிரந்தர பிரிவு இல்லை என்பது உறுதியாகின்றது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் முறையீட்டான மின் துண்டிப்பு செய்யப்பட்ட மின் இணைப்பு எண் 183-009-298-ஐ முதற்தளத்திற்கு திரும்பி வழங்கும் கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

7.11 மேலும் இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மனஉளைச்சலுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"7. .....................*

*.............................*

*(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

**7.12** மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்ககான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது. எனவே, இந்த வழக்கில் மனஉளைச்சலுக்கு நிவாரணம் ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் குறைபாடு சம்பந்தமானது அல்ல

என்பதால் மேற்கண்ட நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

7.13 மேலும், மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான மேல்முறையீட்டாளரின் 25.03.2022 அன்று முறையிட்ட கடிதத்திற்கு 19.05.2022 காலம் கடந்து பதில் அனுப்பியது தெரிய வருகிறது. மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 17–ன்படி ஒரு நுகர்வோரின் எழுத்து பூர்வ கடிதத்திற்கு 10 தினங்களுக்குள் உரிமதாரர் பதில் அளிக்கவேண்டும். எதிர்மனுதாரர் நுகர்வோர் முறையீட்டுக்கு உரிய காலத்தில் பதில் நடவடிக்கை எடுக்க தவறியதாக முடிவு செய்ய வேண்டியது இருப்பதால் மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 21 (6)ன் படி மேல்முறையீட்டாளர் இழப்பீடுபெற தகுதியானவர் என்பதால் ஒவ்வொரு நாள் தாமதத்திற்கும் ரூ.25/– வீதம் பெருமமாக ரூ.250/– ஈட்டுத் தொகை விதிகளின்படி வழங்க ஆணையிடுகிறேன்.

**8.0 <u>முடிவுரை</u> :**

8.1 மேற்கூறிய பத்திகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் முதற்தளத்திற்கு மீண்டும் மின்னிணைப்பு வழங்கும் கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

8.2 நுகர்வோர் முறையீட்டுக்கு உரிய காலத்தில் பதில் கொடுக்க தவறிய எதிர்மனுதாரரின் செயலுக்கு அதற்கான ஈட்டுதொகை ரூ.250/– வழங்க உத்திரவிடுகின்றேன்.

8.3 மேற்கண்ட ஆணையை 30 நாட்களுக்குள் நிறைவேற்றியமைக்கான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் எதிர்மனுதாரர் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

8.4 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 90/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திரு A. தங்கராஜ், – By RPAD
காவடிதட்டுவிளை வீடு,
பனங்கரை, அருமனை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ குழித்துறை,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மருதன்கோடு, மீனச்செல்,
குழித்துறை – 629 153.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.